செ.வெ.எண்.04/டிசம்பர் நாள் : 17.12.2019

**தருமபுரி மாவட்டம், பாலக்கோடு மற்றும் காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியம் அலுவலகங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தல் -2019 வேட்புமனு பரிசீலனை நடைபெற்றதை தொழில் வணிகத்துறை கூடுதல் ஆணையரும் மாவட்ட தேர்தல் பார்வையாளருமான திரு.டி.பி.ராஜேஷ், இஆப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு மற்றும் காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியம் அலுவலகங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தல் -2019 வேட்புமனு பரிசீலனை நடைபெற்றதை தொழில் வணிகத்துறை கூடுதல் ஆணையரும் மாவட்ட தேர்தல் பார்வையாளருமான திரு.டி.பி.ராஜேஷ், இஆப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

தருமபுரி மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி மன்றத் தேர்தல் வரும் 27.12.2019 ஆம் தேதி முதல் கட்டமும் 30.12.2019-ந் தேதி இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் தருமபுரி மாவட்டத்தில் நடைபெறும் ஊரக உள்ளாட்சி தேர்தல் தொடர்பான மாவட்ட பார்வையாளராக திரு.டி.பி.ராஜேஷ், இஆப., அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் நடைபெற்ற வேட்புமனு பரிசீலனை நிகழ்வுகளை தேர்தல் பார்வையாளர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது தேர்தல் அலுவலர்களுடன் ஆலோசனை நடத்திய அவர் பதற்றமான வாக்குச்சாவடிகளில் முன்னேற்பாடு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலண்மை இயக்குநர் திரு.அ.சங்கர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.கோவிந்தன், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (சத்துணவு) திரு.வேதநாயகம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.அன்பழகன், திரு.வடிவேலன், திரு.வெங்கடேஷ் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**